

உன்னைச் சரணடைந்தேன்

கு. செ. இராமசாமி எம்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி துணை

உன்னைச் சரணடைந்தேன்

கு. செ. இராமசாமி எம். ஏ.,

வெளியீடு:

சிவகங்கை அரண்மனை அறநிறுவனத்தார்

சிவகங்கை-

இராமநாதபுர மாவட்டம்.

முதற்பதிப்பு: அக்டோபர், 1972

உரிமை: சிவகங்கை அரண்மனை அறநிறுவனத்தாருக்கு

அச்சிட்டோர்:

முத்தமிழ் அச்சகம், சிவகங்கை-72.

"நின்றசொல்லர் நீடுதோன் றினியர்"



புரவலர்

மேன்மை தங்கிய சிவகங்கை மன்னர்

கௌரிவல்லப

து. ச. கார்த்திகேய வேங்கடாசலபதி ராஜா அவர்கள்



உ

ஸ்ரீ ராஜராஜேசுவரியே துணை

மேதகு சிவகங்கை மன்னர் அவர்கள் வழங்கிய

அறிமுகம்

என் பொறுப்பிலுள்ள கல்விக்கூடங்களுள் ஒன்ருகிய சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக்கல்லூரித் தமிழ்த்துறையில் பணி புரியும் இளைஞர் **திரு. கு. செ. இராமசாமி** நல்ல கவிஞர். சமயப்பற்றும் மொழிப்பற்றும் மிக்கவர். தமிழ் வானில்இவர் வளர்பிறை. இவ் வளர்பிறை முழுநிலவாகும்நாள் வெகுதொலை வில் இல்லை என்பதற்கோர் எடுத்துக்காட்டு இச்சந்தப்பாட்டு. இறைவி ராஜேசுவரியின் தாள் தொழுவார் வாழ்வில் தாழ்ந்தது இல்லை. அவளைச் சரணடைந்த கவிஞர் **இராமசாமி** சோடை போகமாட்டார்; மடை திறந்த வெள்ளம் போல் எதிர்காலத்தில பாடல் பல படைப்பார். அவர் கவிதைகள் காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும்; அவரால் தமிழ் சிறக்கும்.

பத்தாயிரமடி நீளப்பந்தல் போட்டும் திருமணம் நடத்தலாம். பத்தடிப் பந்தலுக்குள் பத்துப்பேர்க்குப்பந்தி போட்டும் திருமணம் நடத்தலாம். உயர்பாணி மொழியிலும் எழுதலாம். எளிய சொல் கொண்டும்

காவியம் படைக்கலாம். உயர்பாணியைக் கையாள்வார் பாட்டு ஒரு சிலர்க்கே—ஏட்டுச் சுவடிகளை நன்கறிந்த அந்த ஒரு சிலர்க்கே.

எளியபாணியினர் பாட்டு பலர்க்குச் சொந்தம், திண்ணைப்பள்ளிச் சிறுவர்களுக்கும் சொந்தம்; விண்ணைப் பார்த்தே பொழுதைக் கழிக்கும் தாத்தா பாட்டிகளுக்கும் சொந்தம். இப்பாட்டு இனியது;எளிய நடையுடையது; யாவர்க்கும் எளிதில் புரியக் கூடியது. இதனைப்படிக்கும் மெய்யன்பர்கள் அம்மனின் திருவருளைப் பெறுவார்களாக!

து. ச, கார்த்திகேய ராஜா

முன்னுரை

அறுவகை வழிபாடுகள்

இந்திய தத்துவ ஞானங்களை ஒழுங்கு செய்து தொகுத்த பெருமை ஆதிசங்கரரையே சாரும். அன்னாரின் அரிய உழைப்பால் இந்துமதம் புதிய வடிவும் வாழ்வும் பெற்றது.

''அவர் தொடாதது ஒன்றும் இல்லை. தொட்டதை அழகு படுத்தாமல் விட்டதில்லை'' என ஆங்கிலப் பெருங்கவிஞர் கோல்டுஸ்மித்தை டாக்டர் ஜான்சன் புகழ்ந்துரைத்தார். இப்புகழுரை ஆதிசங்கரர்க்கும் பொருந்தும். இப்பேரறிவாளர் சிந்தித்துப் பார்க்காத அறிவுத்துறைகளே இல்லை; சிந்தித்துப் பார்த்த எதனையும் செம்மைப்படுத்தாமலும் விட்டதில்லை.

ஆதிசங்கரரின் பிறதுறைப்பணிகளை நினைவுகூர மறந்தாலும், இந்துமத வழிபாட்டு முறைகளைச் செம்மைப்படுத்திய திருப்பணியை இங்கு நினைவோடு குறித்தல் வேண்டும். நூறு வேறு முறைகளாகக் குழம்பிக் கிடந்த வழிபாட்டுச் சிந்தனைகளை ஆறுவேறு முறைகளாக அவர் நெறிப்படுத்தியருளினர்.

காணபத்யம், கௌமாரம், சைவம், சாக்தம், வைணவம், சௌரம் என பக்தி வெள்ளத்திற்கு அவர் பாதை வகுத்துத் தந்தார். பிற்காலத்தில் இந்த அறுவகை வழிபாடுகளும் தனித்தனிச் சமயங்களாகத் தழைத்து வளர்ந்தன.

கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடுவது காணபத்யம். இவ்வாறே கௌமார சமயத்தினர் குமரவேளையும், சைவர் சிவபெருமானையும், சாக்தர் பராசக்தியையும், வைணவர் திருமாலையும், சௌரநெறியாளர் சூரியபகவானையும் தத்தம் கடவுளராக வழிபடுவர்.

சக்தி வழிபாடு ஆறு பிரிவுகளுள் ஒன்றாக அடங்குவதாயினும் ஏனைய ஐந்தையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் சிறப்புடையது.

இதன் பெருமைகளைச் சற்றே ஆராய்வோம்.

முதல் வழிபாடு

மனிதன் செய்த முதல்வழிபாடு சக்தி வழிபாடே எனலாம். ஆதிமனிதன் இடி, மின்னல், காற்று, மாரி, பூகம்பம், காட்டுத்தீ, பெருவெள்ளம் போன்ற தனக்கு மீறிய இயற்கைச் சக்திகளைத் தெய்வமாக வணங்கினான். அச்சமோ, அறியாமையோ காரணம் எதுவாக இருப்பினும் ஆதிமனிதன் தொடங்கி வைத்த அதே வழிபாட்டைத்தான் அறிவின் கொடுமுடியில் ஆனந்த நடம் புரியும் இன்றைய அறிவியல் மனிதனும் பின்பற்றி வருகிறான். "அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நான் எதனைக்காணுகின்றேன்? — சக்தி வழிபாட்டை; ஆற்றலின் ஆராதனையை" (What do I find in America and Europe?—the worship of Shakti, the worship of Power) என்ற விவேகானந்த அடிகளின் திருவாய் மொழியும் இங்கு நினைக்கத் தக்கது.

தொன்மையான வழிபாடு

சங்கரரால் நிறுவப்பட்ட அறுவகை வழிபாடுகளுள் சாக்தம் எனப்பெயர் பெறும் சக்திவழிபாடுதான் மிகவும் தொன்மையானது. இது எவராலும் தோற்றுவிக்கப்படாதது. காலங்காலமாகப் பயிலப்பட்டு வருவது.

"உலகில் மிகப்பழைய நாகரிகங்கள் கொண்ட தேசங்கள் கி மு. நாலாவது ஆயிரமாண்டு வரை இருந்தன. இவைகளுக்குச் சான்றான புதைபொருள்களுக் கிடையே தேவியைச் சித்திரிக்கும் பல சிறு உருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன" எனத் திருவாளர் P. R. சீனிவாசன் அவர்கள் "நாம் வணங்கும் தெய்வங்கள்" என்ற தமது ஆராய்ச்சிநூலில் குறிப்பிடுகின்றார். கி. மு. 2003

அளவில் புதையுண்டதாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்தில் சக்தி வழிபாடே மேலோங்கியிருந்ததாகத் தெரிகிறது. மொகஞ் சோ-தரோவில் அகழ்வாராய்ச்சி நிகழ்த்திய அறிஞர் சர்ஜான் மார்ஷல் பல சக்தி படிமங்களை, பெண்தெய்வ உருவங்களைக் கண்டெடுத்தார். ஹரப்பா அகழ்வாராய்ச்சியிலும் தேவியின் சிலா ரூபங்கள் கிடைத்துள்ளன இவற்றை ஆதாரமாக வைத்து நோக்கும் போது ஐந்து அல்லது ஆறுயிரம் ஆண்டுகளாகவே இந்திய மக்களின் இதயசிம்மாசனத்தில் அன்னைமாசக்தி அருட்கொலு வீற்றிருப்பதை ஒருவாறு உணர முடிகின்றது. அன்றியும், சிந்து வெளி நாகரிகத்தைத் திராவிட நாகரிகமாகக் கொள்வோமானல், சக்தி வழிபாட்டைத் **திராவிட சமயமாகக்** கருதுவது தவருகாது. தென்னிந்தியா முழுவதும், இன்றளவும், சக்தி வழிபாடு பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

உலகளாவிய வழிபாடு

கிறித்துசமய எழுச்சிக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்தெய்வ வழிபாடு உலகெங்கும் பரவியிருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஹரப்பாவிலும், வட பலுசிஸ்தானத்திலும் ஒரே வகையான சக்தி படிமங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இன்னும் பிற மேற்காசிய நாடுகளிலும் எகிப்திய, கிரேக்க, மெசபடோமிய நாகரிகங்களிலும் பெண் தெய்வ வழிபாடு பெருஞ்சிறப்போடு விளங்கியதாகவும் அறிகிருேம், இவையனைத்தையும் உளங்கொண்டு பார்க்கும்போது சக்தி சமயம் உலகச் சமயமாகத் திகழ்ந்திருப்பது கண்டு பெரிதும் வியப்படைகின்ருேம்.

கி. மு. 5 ஆம் நூற்ருண்டு முதல் கி. பி. 3-ஆம் நூற்ருண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் பாரததேசம் பௌத்ததேசமாக மாறியிருந்தது. புத்தநெறி பெருவழக்காயிருந்த இக்காலத்திலும் சக்திநெறி தாழ்வு படாதிருந்ததாக அறிஞர்கள் சான்று காட்டி நிறுவுகின்றனர். தேவி வழிபாட்டைத் தடுக்கவோ ஒடுக்கவோ இயலாத பௌத்தர்கள்-சக்திதாசர்களையும் தங்கள் சங்கத்

தில் ஈடுபடுத்திக் கொள்ளும் நோக்கத்தில் யக்ஷி, ஹாரிதி முதலான பெண்தெய்வங்களையும் தமது தெய்வக் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டார்களாம்!

இயற்கை வழிபாடு

சக்தி வழிபாட்டை இயற்கை வழிபாடு என்றும் கூறலாம். **ஈச்வரீம் ஸர்வபூதாநாம்** என்றபடி, காணும் பொருட்களனைத்தையும் அம்பிகையின் கருணைத்தோற்றங்களாகக் கருதுவது மரபு. கங்கை முதல் காவிரிவரை இந்த நாட்டில் ஓடும் எல்லா நதிகளையும் தீர்த்த மாதாக்களாக வணங்குகிறோம். சலியாமல் நம்மைத் தாங்கிச் சுமக்கும் பூமியைப் பூமாதேவி என்று போற்றுகிறோம். பசுவைக் கோமாதாவாகவும், பசிதீர்க்கும் உணவை அன்னலட்சுமியாகவும் அன்புசெய்கின்றோம். பிறநாட்டார் வெறும் தாவரமாக மதிக்கும் துளசிச்செடியைத் துளசிதேவியாக்கி நாம் துதிபாடுகின்றோம். தானியங்களிலிருந்து தட்டுமுட்டுச் சாமான்கள் வரையில் பயன்தரும் எல்லாப் பொருட்களையும் திருமகள் கோலங்களாகச் சிரந்தாழ்த்துகின்றோம். பேசும் மொழிக்கும் வாழும் நாட்டிற்கும் தெய்வத்தன்மை ஏற்றி—தமிழ்த்தாய், பாரதசக்தி என வாழ்த்தும் வணக்கமும்பாடி வருகின்றோம். இயற்கையில் இறைமை காணும் கவிவாணர்கள் அந்த இறைமையையும் பெண்மையாகத்—தாய்மையாகத்தான்காணுகிறார்கள். மகாகவி பாரதியார் விருப்பப்படிப் பாவேந்தர் பாரதிதாசனார் பாடிய முதற்பாடலே இதற்குத்தக்க சான்றாகின்றது:

எங்கெங்குக் காணினும் சக்தியடா!—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா!—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா—ஒரு
கங்குகளில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ?—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!

தாய்மை வழிபாடு

சக்திதத்துவம் தாய்மை விளக்கம். **மாத்ரு தேவோ பவ** என வேதம் முழக்குகின்றது. 'தாயிற்சிறந்த கோயிலுமில்லை' எனத்தமிழ் பறைசாற்றுகின்றது. கருணையும், அன்பும், பொறுமையும், தியாகமும், முழுமையும் குடிகொண்ட இடம் தாய்மை. தாயை, தாய்க்குலத்தைத் தெய்வமெனப் போற்றி வழிபடுவதே இந்தியப்பண்பாடு. இதுவே உலகப் பண்பாடும் ஆகும்.

பரம்பொருளைத் தாயாகப் பாவித்து வழிபடுவது சக்திவழிபாடு. 'தாய்வழிபாட்டுநெறி' என்றும் இதனை அழைக்கலாம். தெய்வத்தைத் தாயாக உருவகித்து வணங்குகையில் ஏனைய வழிபாடுகளில் இல்லாத உரிமையும், சலுகையும், ஒளிவு மறைவற்ற தன்மையும் உண்டாகின்றன. இதனால், "பொல்லாத பிள்ளையெனில் தாய்தள்ளல் நீதமோ? புகலிடம் பிறிதுமுண்டோ?" என்று தாயுமானவர்போல, "தஞ்சம் அடைந்தபின் கைவிடலாமோ? தாயும் தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?" என்று மகாகவி பாரதியாரைப்போல நாமும் தெய்வத்தோடு பிடிவாதம் செய்யவும் இயலுகின்றதல்லவா? இதுவே சக்தி வழிபாட்டின் தனிப்பெரும் சிறப்பு.

"இக்காலத்தில் கடவுளைத் தாயாக, முடிவற்ற சக்தியாகவே வழிபடுதல் வேண்டும். இது தூய்மையை எய்துவிக்கும். இதனால் பேராற்றலும் அமெரிக்க நாட்டில் தோன்றும்" (At the present time God should be worshipped as "Mother", the Infinite Energy. This will lead to purity, and tremendous energy will come here in America) என விவேகானந்த அடிகள் தாய்வழிபாட்டு நெறியை அமெரிக்க மக்களுக்கு உபதேசித்தருளுகின்றார். அமெரிக்க மாதர்களையும் சக்தி படிமங்களாகவே கண்ட அடிகள், "அனைத்தையும் உதறி எறி; நாவை மட்டும் 'அம்மா, அம்மா' என்று கூவப்பழக்கு!" (Throw out

everything but the tongue, keep that to say, 'Mothey' Mother'!") என ஆணைதந்தருளுகின்றார்.

இக்கால இறைமறுப்பாளர்களையும் ஒரு வகையில் சக்தி உபாசகர்களாக எண்ணலாம்! 'கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாத' பக்திமான்களிடம் இல்லாத சிறப்பியல்பை பகுத்தறிவாளர்களிடம் பார்க்கின்றோம். ஈன்ற தாயை ஏறெடுத்தும் பாராமல் நோன்பும் பூசனையும் நூறு செய்தும் பயனென்ன? எப்பயனும் இல்லை. ஆனால் இறைமறுப்பாளர்களோ தாயே பெருந்தெய்வம் என்ற கொள்கையினராகத் தாய்திருவடி தலைமேற்கொள்கின்றனர். தாயின் ஆசிபெற்றே தம் பணிதொடங்குகின்றனர். இதனால் தாய்க்கும் தாயான சக்திதேவியின் பரிபூரண அருள் இவர்களுக்குக் கிட்டுகின்றது. மணமாகாத கன்னிப் பெண்களை வைத்துக் கன்யா பூசையும், மணமான மங்கல மடந்தையரை வைத்துச் சுமங்கலி பூசையும் செய்வோர்க்குக் கிடைக்கும் பலனும் இன்பமும் இத்தகைய தாய் வழிபாட்டாளர்களுக்கும் தடையின்றிக் கிடைக்கின்றன. இதுவே சக்திதத்துவத்தின் ரகசியம்.

சமரச வழிபாடு

பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்குவது சக்தி வழிபாடு. அருமைக்கு அருமையாய் எளிமைக்கு எளிமையாயும் திகழ்வது இது. சாத்திர விதிகளின்படி அம்பிகையை எழுந்தருளுவித்து வேதமும். கீதமும், நிவேதனங்களும் படைத்தும் இவளை அன்பு செய்யலாம். ஆடம்பரம் எதுவும் இன்றி 'அம்மா' என ஒரு முறை அன்போடு கூவுவதிலும் நம் ஆத்மாவை இவளுக்கு நிவேதித்து விடலாம்.

காளியம்மன், மாரியம்மன், திரௌபதியம்மன், அங்காளம்மன், துலுக்காணத்தம்மன், மூத்தாலம்மன் என எண்ணிறந்த கோலங்களில் இந்த நாட்டின் கிராமங்கள் தோறும் அம்பிகை கோயில் கொண்டிருக்கிறாள். எளிய விவசாயிகள், தொழிலாளர்களின் குடும்பத்தில் ஒருத்தியாகவும் அங்கம் வகிக்கிறாள். கேரள நாட்டில் "நாயர் இனத்தாரின் வீடுகளில் நடுப்பகுதி

பகவதிக்கே அர்ப்பணிக்கப்படும். அவர்களது வீடுகளில் பகவதி சேவை அடிக்கடி நடைபெறுவதைக் காணலாம். கேரளநாட்டின் மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடி மக்கள் சக்தியை நீலி என்ற பெயரிலே வணங்குகின்றனர். மரத்தினடியில் மேற்கூரையில்லாது அமைந்துள்ள பகவதி கோயில்கள் பல அங்கு உள்ளன" என்று அறிஞர் எஸ். பத்மநாபன் "குமரிமாவட்டக் கோயில்கள்" என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கோலமும் குணமும் பலப்பலவாகக் கற்பிக்கப்பட்டாலும் ஞாலமும் வானும் படைத்த நாயகியின் சாந்நித்தியம் பெற்றவைகளாகவே கிராமதேவதைகள் விளங்குகின்றன. பஞ்சமும் நோயும் வராது தடுக்க மஞ்சளும் குங்குமமும் மாமருந்தாகக் கைக்கொள்ளப் படுகின்றன. பாமரபக்தி எனப் படித்தவர்கள் ஏளனம் செய்தாலும் நம்பிக்கையொன்றையே ஆதாரமாக வைத்து நமது கிராமவாசிகள் பல அற்புதங்களை நிகழ்த்துகின்றார்கள். அரசர்க்கும் அரசியாக விளங்கும் செல்வச் சீமாட்டி பொய்யிலாத ஏழையின் நொய்யரிசிக் கஞ்சியிலும் பசியாறுகின்றாள்! ஆம், சக்தி வழிபாடு சமரச வழிபாடு; சன்மார்க்க வழிபாடு.

சக்தி வழிபாட்டின் இன்றியமையாமை

"சக்தியின்றி உலகம் மறுமலர்ச்சியடைய முடியாது" (Without Shakti (power) there is no regeneration for the world)

"சக்தியின் அருளின்றி எதையும் சாதித்துவிட முடியாது" (Without the grace of Shakti nothing is to be accomplished)

"எனக்குத் தந்தையன்பைவிடத் தாயின் கருணை நூறாயிரம் மடங்கு அதிகமதிப்புடையது. தாயின் கருணையை–தாயின் நல் வாழ்த்துக்களையே அனைத்துக்கும் மேலானதாக நான் கருதுகின்றேன்"(To me, Mother's grace is a hundred thousand times more valuable than Father's.Mother's grace,Mother's blessings are all paramount to me) என்று பலபடியாகச் சக்தி வழி

பாட்டின் இன்றியமையாமையை விவேகானந்த வள்ளல் விரித் துரைக்கின்ருர்.

"ஏகமாய் இருக்கும் என்தாய் பராசக்தி பல்வேறு தோற்றத்துடன் விளங்குகிருள். அழிவில்லாத சக்தியை யுடைய அவள் ஜீவனுகவும் ஜகத்தாகவும் பேதப்பட்டு, சரீரம், புத்தி, சன்மார்க்கம், ஆத்மார்த்தம் முதலிய வேறு பட்ட சக்திகளையுடையவளாய்க் காணப்படுகிருள். சக்தி வேதாந்தத்தில் கூறப்படும் பிரம்மமே தவிர வேறல்ல. கட்புலனுகாத பிரம்மத்தின் பிரத்யக்ஷஸ்வரூபமே அவள்" என்பது மஹாசக்தியின் அருள்மைந்தரான பரமஹம்சதேவரின் திருவாசகமாகும்

இலக்கியம் புகழும் வழிபாடு

வடநூற்கருத்துக்கள்

வேதம் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரையில் அனைத்திலும் அம்பிகை சிறப்பிடம் பெறுகின்ருள். அன்னையை ***அதிதி*** என வேதம் அறிவிக்கும்.

"ஆண் தெய்வங்களின் ஆசானுக விளங்குபவள் அவளே" என்று கேனேபநிடதம் சக்தி முதன்மை சாற்றும் (She-women-hood incarnate-becomes the guru of the male gods)

"அன்னையே! இந்த உலகப்படைப்பு உனக்கு விளை யாட்டு. உனது நண்பன் மகாதேவன். உனக்கு உணவு ஆனந் தமே. நீ வசிக்கும் இடமோ அடியேனது இதயக்குடில்" என இந் திரன் வாய்மொழியாகவும் இறைவியை வடநூல் புகழுகின்றது.

"இவளே பரம்பொருளுக்குச் சாட்சியாக விளங்குபவள். சங்கரனுக்கும் நன்மை விளைவிப்பவள். அவனுடன் கூறுகொண்ட வள்–இவளன்றிச் சிவன் இல்லை"–இது ஸூதஸம்ஹிதைபாடும் துதி.

"வெளியில் தெரியாத உருவுடைய தேவி மகாகாளிஉருவெடுத்து உலகைச் சிருஷ்டிக்கிருள்; இலக்குமியாக இருந்து உலகிற்கு வளத்தையும், செல்வத்தையும் கொடுக்கிருள். சரஸ்வதியின் உருவிலிருந்து அறிவைக் கொடுக்கிருள். உலகை அழிக்கும் உருவில் மஹாமாரி எனப்படுவாள். வளத்தையும் செல்வத்தையும் அழிப்பதால் இவளை அலட்சுமி அல்லது கேட்டை என்பார்கள்'' என மார்க்கண்டேய புராணம் வருணிக்கின்றது.

தாமக்நிவர்ணுப் தபஸா ஜ்வலந்தீம்

வைரோசநீம் கர்மபலேஷு ஜுஷ்டாம்।

துர்காம் தேவீம் சரணம் அஹம் ப்ரபத்யே

ஸுதரஸி தரஸே நம॥

இது நாராயண உபநிடதம் தரும் ஆற்றல் வாய்ந்த சக்திமந்திர மாகும்.

ஷண்மத ஸ்தாபனம் என்னும் அறுசமய வழிபாட்டு முறைகளை நிறுவி, ஒவ்வொரு வழிபாட்டிற்கும் தோத்திர-சாத்திரங்களையும் அருளிய ஆதிசங்கரர் ஓர் அம்பிகைதாசர். சங்கரரின் உபாசனைத்தெய்வம் பராசக்தியே. நாடெங்கும் சுற்றிச் சக்திபீடங்கள் அனைத்தையும் பாடியுள்ள பகவத்பாதர் தாம் இயற்றிய "ஸௌந்தர்யலஹரீ" என்ற நூலில் சக்திதத்துவமே மேலான தத்துவம் என நிலைநாட்டுகின்ருர். மஹா சக்தியின் அருளின்றி ஏனைய தெய்வங்கள் அருள் செய்ய இயலா தெனவும், அம்பிகை மட்டுமே எவர் துணையுமின்றி எதனையும் புரியவல்லவள் எனவும், ஆண்தெய்வங்கள் கைகளால் வழங்கும் சக்தி மட்டுமே பெற்றிருக்கப் பரதேவதையான தேவி அனைத்தையும் தன் திருவடிகளாலேயே வழங்குகின்ருள் எனவும், இன்னும் பலவாருகவும் ஆதிசங்கார் ஸ்ரீராஜராஜேஸ்வரியின் திருப்புகழ் பாடுகின்ருர்.

தமிழ்நூற் கருத்துக்கள்

தமிழிலக்கணம் பாலைத் திணையைக் கொற்றவைக்கு உரிமையாக்குகின்றது "வாகைதானே பாலையது புறனே" என்பதற்

கிணங்கப் பிரிந்த காதலரை இணைத்து வைப்பவள் எனவும்,அரச னுக்குப் போர்க்களத்தில் வெற்றி சேர்ப்பவள் எனவும் தமிழி லக்கியம் அன்னை புகழை ஆர்வமுடன் போற்றுகின்றது.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்ருயால்-
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!

எனத் தேவி வடிவைச் சித்திரமாய்த் தீட்டுகிறது சிலப்பதிகாரம்.

வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே-என

உலகநாயகியை உவந்து போற்றும் திருமூலர் இன்னும் ஒரு படிமேலேபோய்,

சக்திஎன் பாள் ஒரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்
பத்தியைப் பாழில் உதத்தஅப் பாவிகள்
கத்திய நாய்போல் கதறுகின் ருரே—எனச்
சக்தி தத்துவம் உணராதவரைச் சாடவும் செய்கிருர்!

தேவார திருவாசகங்கள் அம்பிகையைச் சிவசக்தியாகக் காணுகின்றன. திவ்விய பிரபந்தமோ விஷ்ணுசக்தி (திருமகள்) யாகப் போற்றுகின்றது. கவிவாணர்கள் பிரமசக்தியாகக் (கலை மகள்) கொண்டாடுகின்ருர்கள்.

மகாகவி காளிதாசனைப் போலவே கம்பரும், காளமேக மும் தேவி அருளால் தேசந்தழுவிய புகழ்பெற்ருர்கள். சம்பந் தருக்கு ஞானப்பால் ஊட்டிய திருக்கரம் குமரகுருபரர்க்குப் பரி

சில் வழங்கிப் பாராட்டியிருக்கின்றது. சக்தி உபாசகர்களுள் தலை சிறந்தவரான அபிராமி பட்டர்,

ஆதித்தன் அம்புலி அங்கி
குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி
முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன்
கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர்
போற்றுவர் தையலையே—என மனிதர், தேவர், முனிவர் என்னும் அனைவரையும் அன்னையின் சந்நிதியில் அடைக்கலம் புகவைக்கின்றார்!

'அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே! பின்னையும்கன்னி யென மறைபேசும் ஆனந்தரூப மயிலே!' என்று தாயுமானவ அடிகளும் 'அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி வானந்த வல்லி உமையே'! என்று வடலூர் வள்ளலாரும் மனமும் நாவும் இனிக்க மஹாசக்தியை அழைக்கின்றனர்.

எண்ணும்எண் ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி
கண்ணும் ஆருயி ரும்என நின்றுள்
காளித் தாய்இங்கு எனக்கருள் செய்தாள்!
மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ?
விண்ணு ளோர்பணிந்து ஏவல்செய் யாரோ?
வெல்க காளி பதங்கள்என் பார்க்கே! எனத்தேவியின் திருவடிப் புகழ்ச்சி பாடும் பாரதி "சக்திதாசன்" என்ற புனை பெயருக்கும் தாம் பொருத்தமானவர் என்பதைப் புலப்படுத்தியுள்ளார். பராசக்தியின் முழுப்பேரருளும் பெற்ற பாரதி,

நம்பினோர் கெடுவதில்லை
நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிகவரம் பெறலாம் என அஞ்சும் நெஞ்சங்களுக்கு ஆறுதல் சேர்க்கின்றார்; அடைக்கலமும் காட்டுகின்றார்.

யாவும் சக்திவழிபாடே

அருளது சக்தி யாகும்
அரன்தனக்கு; அருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை; அந்தச்
சிவமின்றிச் சக்தி இல்லை.

(சிவஞான சித்தியார்)

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி

(திருவாசகம்)

ஒருவன் என்கோ ஒருத்தி என்கோ

(குமரகுருபரர்)

சிவ-சக்தி ஐக்கியம் இவ்வாறெல்லாம் வலியுறுத்தப் பட்டாலும், இந்த ஒருமைப் பாட்டிலும், சக்தியம்சமே மேலோங்கியிருப்பதாகச்சாக்தநெறி நம்புகின்றது.சாக்த நூல்கள் சிவமும் சக்தியில் அடங்குதாகக் குறிக்கின்றன. சக்திதத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுவதால் திருமூலரும் அம்பிகையே ஈசனுக்கும் தாயாய் விளங்குவதாகப் பாடியுள்ளார். அபிராமி பட்டரோ 'கறைக்கண்டனுக்கும் மூத்தவளே,' என அன்னையை ஆராதிக்கின்றார்.பிரமன் முதலான மும்மூர்த்திகளிடமும் இருந்து முத்தொழிலையும் அம்பிகையே இயற்றுவதாக லலிதாஸஹஸ்ரநாமமும் தெளிவாகக் கூறுகின்றது:

ஸ்ருஷ்டிகர்த்ரீ ப்ரஹ்மரூபா
கோப்த்ரீ கோவிந்தரூபிணீ||
ஸம்ஹாரிணி ருத்ரரூபா

திரோதான கரீச்வரீ!

ஸதாசிவா னுக்ரஹதா

பஞ்சக்ருத்ய பராயணு

(லலிதா ஸஹஸ்ரநாமம்)

தரணியில் அரணிய முரண் இரணியன் உடல்

தனைநக நுதிகொடு சாடோங்கு நெடுங்கிரி

என்று திருமாலின் செயலேயும்,

ஓடேந்து பயங்கரி

என்று சிவபெருமான் செயலேயும் தேவியின் செயல்களாக அருணகிரிநாதர் சித்திரிக்கின்ருர். இவ்வாறே முருகக்கடவுள், விநாயகர் முதலானேர் செயல்களேயும் இறைவியின் திருவிளே யாடல்களாக ஞானியர் குறிக்கின்றனர். திருமாலின் பத்தவதாரங் களும் பிறவும் அம்பிகையின் ஆணேவழி நிகழ்ந்தனவாகத் தேவி பாகவதம் விரித்துரைக்கின்றது.

இவற்ருல் அனேத்து வழிபாடுகளும் அம்பிகை வழிபாட் டில் அடங்கும் என்பதை ஒருவாறு உணரலாம். ஜீவ சைதன் யமாய், குண்டலினீசக்தியாய் ஒவ்வொரு சரீரத்திலும் அன்னே உறைகின்ருள். யோகசாத்திரங்களும், மந்திர சாத்திரங்களும் மூலாதாரத்தில் சர்ப்பம்போல் சுருண்டு துயிலும் குண் டலினீ சக்தியை மேலெழுப்பிச் சஹஸ்ராரத்தில் பரம்பொருளேத் தரிசிக்கும் பேரின்ப நிலேயை விரித்துக் கூறும். இராமகிருஷ்ண பரமஹம்சரைப்போலவே ரமணமகரிஷி, சேஷாத்திரி ஸ்வாமிகள் போன்ருேரும் அன்னேயின் அருளால் ஆனந்தநிலே எய்தியவர் கள் என்பதை உலகம் நன்கறியும்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி

சக்திபடிமங்கள் அனேத்தையும் இங்கு விளக்குதல் அரிது. காளி என்ற பொதுப் பெயரில் மட்டும் அறுபத்து நான்கு வடிவங்களில் துர்க்கை வழிபாடு நடைபெறுகின்றது. நீலகண்டி

க்ஷேமங்கரி, ஹரசித்தி, ருத்திர சூசதுர்க்கை, வனதுர்க்கை, அக்னி துர்க்கை, ஜயதுர்க்கை, விந்திய வாச துர்க்கை, ரிபுமாரி துர்க்கை என்னும் நவதுர்க் கைகளும், இன்னும் சப்தமாதர்–சப்த கன்னிகையர் போன்ரேரும் தேவி கொள்ளும் வெவ்வேறு கோலங்களே எனலாம்.

காஷ்மீரத்தில் அம்பாள் என்றும், வங்காளத்தில் காளி என்றும், இராசபுதனத்தில் பவானி என்றும், கூர்ச்சரத்தில் கல்யாணி என்றும், கன்னட நாட்டில் சாமுண்டேஸ்வரி என்றும், கேரளத்தில் பகவதி எனறும், தமிழகத்தில் கொற்றவை என்றும், அம்பிகையை வழிபடுகின்றனர். இமயவெற்பில் உமையவளாக, தெற்கெல்லேயில் குமரிபகவதியாக, மேற்கெல்லேயில் பவானியாக, கிழக்கெல்லேயில் காளி தேவியாக வீற்றிருந்து பாரதநாட்டையே பாலித்துவரும் அன்ஃன இராஜராஜேஸ்வரி என்ற திருக்கோலத்தில் அரசர்க்கரசியாக அண்டகோடிகள் அஃனத்தையும் ஆட்சி புரிகின்ருள்.

அறநெறி தவருத ஆட்சியாளர்களுக்கு இவளே கண்கண்ட தெய்வமாக அருள்பாலித்திருக்கிருள். புராண இதிகாசங்களிலும், இன்னும் இந்நாட்டின் வரலாற்றிலும் இடம் பெற்றுள்ள எண்ணற்ற பேரரசர்களும், பெருவீரர்களும் இவள் துஃண ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு வியத்தகு சாதஃனகஃள நிகழ்த்தியிருக்கிருர்கள்.

இந்த நூல்...

பாகம்பிரியாள், கண்ணுடையநாயகி, பத்ரகாளி, பெரியநாயகி எனக்கோலம் பல தாங்கிச் சிவகங்கைச் சீமையெங்கும் கோயில் கொண்டிருக்கும் அன்ஃன, ஊர்க்கு நடுவண் உயர்ந்து நிற்கும் அரண்மஃன ஆலயத்தில் ஸ்ரீஇராஜராஜேஸ்வரி என்னும் திருப்பெயரோடு காட்சிதருகின்ருள்.

இவள் சிவகங்கை அரசமரபின் காவல் தெய்வமாக விளங்குபவள். செருமுஃனயில் வெற்றியையும், செல்லும் இடமெல்லாம் பெரும்புகழையும் சேர்த்துக் கௌரிவல்லப மன்னர் பரம்பரையை வழிவழி காத்துவரும் குலதெய்வமும் இவளே.

சொல்லுக்கடங்காத புகழுடைய இப்பெருமாட்டியைத் துதித்துப் பாடுமாறு தேவியின் செல்வப் புதல்வராய் விளங்கும் சிவகங்கை மன்னர் **மேதகு கார்த்திகேய வேங்கடாசலபதி ராஜா அவர்கள்** என்னைப் பணித்தார்கள். நானும் இயல்பாகவே அம்பிகைக்கு அடிமை பூண்டொழுகும் நெறியினன் ஆதலின் அரசர் வாயிலாக அம்பிகையே ஆணை தருவதாக உணர்ந்தேன்; மகிழ்வுடன் இசைந்தேன்.

இது நான் பெற்ற பெரும் பேறு.

என் இதயத்தில் வாழும் இறைவியை இமயத்தில் வாழும் உமையவளாகப் பாடத்தொடங்கினேன். "ஊர் தோறும் போய் அவளை உருகித் தொழா எனக்கும் சீர்தோறும் கைகொடுத்தாள்; செந்தமிழாய் ஊறிவந்தாள்!"

மேதகு கௌரிவல்லப **கார்த்திகேய மன்னரவர்களின்** பேராதரவால், "ஏழை இதயத்தில் எழுச்சிபெற்ற எண்ணங்கள் வாழும் தமிழ் நூலாய்" வடிவம் பெற்றுள்ளன. வழிவழி இராஜ ராஜேஸ்வரி தாசர்களாய் விளங்கும் திருமரபில் பிறந்த கௌரி வல்லப மன்னரவர்களுக்கும், சிவகங்கை அரண்மனை அறநிறுவனத்தாருக்கும் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேன். அன்னை இராஜ ராஜேஸ்வரியின் அருளால் மன்னரவர்கள் எல்லா நலன்களும் இனிது வாய்க்கப்பெற்று நீடு வாழ வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

அன்னையே!

பக்தி என்ற நூலில் சில பனிமலர்களைத் தொடுத்து நின் பாதாரவிந்தங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன். சில மலர்களில் மணம் குறையலாம்; சில காம்பு

களையப்படாதவைகளாக நெருடவும் செய்யலாம்; சில முள்ளோடு கிள்ளப் பட்டவைகளாகவும் இருக்கலாம்.

எனினும், இவைகள்—

ஆசைமகன் படைக்கின்ற அன்பு மலர்கள்; ஆர்வமுடன் சூட்டுகின்றேன். அருள் புரிவாயாக!

மன்னர் நினைவுக் கல்லூரி,
சிவகங்கை.
அக்டோபர், 1972

கு. சே. இராமசாமி

உ

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி துணை.

காப்பு

அண்டங்கள் ஏழினோ டேழும்அப் பாலுமாய்
ஆனஎம் ஞான தேவா!
அறுகுடன் தும்பையும் ஆத்தியும் கொன்றையும்
அணிசெய்யும் அழகு மார்பா!
எண்டிசை நடுங்கவே இறைவனார் தேரின்அச்(சு)
இற்றிடச் செய்த வீரா!
இலகுபுகழ் முனிசொல்ல உலகுபுகழ் பாரதம்
எழுதிடும் கவிதை நேசா!
தண்டையொடு கிண்கிணி சதங்கையும் கொஞ்சவே
சந்தநடை கொள்ளும் பாதா!
சரவணன் அறுமுகன் மணமகன் ஆகவே
தண்ணளி புரிந்த ஈசா!
தெண்டிரை சூழுலகில் தேவிரா சேச்வரியின்
தெய்வமாக் கருணை பாடச்
சித்தமிசை குடிகொண்ட தத்துவ விநாயகா
திருவருள் தந்து நீகா!

1

சிந்தூரம், குங்குமம், செவ்வானம், அவ்வானம்
திகழவரு கதிரின் உதயம்;
தேசுமிகு மாணிக்கம், திருஏறு கமலம், அச்
செங்கமலம் அஞ்சு பவழம்;
மந்தாரம், மழைநாளில் வரும்இந்த்ர கோபம், அவ்
வண்டூரும் மலையில் நறவம்;
மான்மதம், செங்குருதி போன்மலரும் மாதுளம்,
மாதுளம் சிதறு முத்தம்;
செந்தீயின் வண்ணம்என வேசொல்லு (ம்) மேனியும்,
செப்பரிய அழகு வடிவும்,
சிங்கா தனத்திலும் சிவனார் மனத்திலும்
சீர்கொண் டிலங்கும் எனினும்,
எந்தாய்நின் பேர்சொல்லும் ஏழையேன் அறிவிலும்
என்றென்றும் திகழ அருள்வாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

2

தேருத கவிஎனிலும் மாருத காதலால்
திருமுன்பு சாற்று கின்றேன்!
சிந்தைஅணு ஒவ்வொன்றும் தேவிஉன தேஆகச்
செய்யதமிழ் பாடு கின்றேன்!
ஆருத துயருக்கும் அகலாத கவலைக்கும்
ஆரைநான் நொந்து கொள்வேன்!
அறியாது பிழைசெய்து சரியாக வதைபட்ட
அவலத்தை எங்கு சொல்வேன்!
நீருக வேநிருதர் புரமூன்றும் செற்றஉனை
நெஞ்சாரப் போற்று கின்றேன்!
நெற்றிவிழி யால்எனது குற்றமலை பொடியாக
நின்னருளை வேண்டு கின்றேன்!
ஈறேதும் இல்லாத இன்பவடி வாகஎன்
இதயதள மீதும் ஒளிர்வாய்!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

3

நோக்கும் திசைதொறும் நூபுரத் தாள்களும்,
நூல்போல் ஒசிந்த இடையும்,
நொடிதோறும் நொடிதோறும் புதிதான எழில்கொள்ளும்
நுவலரிய திருமே னியும்,
வார்க்குங் குமக்கச்சு மார்பும், அம் மார்பினில்
வாடாத மலர்மா லையும்,
வயிரமொடு நவமணி வயங்குமங் கலநாணும்,
மணம்வீசும் இனிய பொலிவும்.
காக்கும் கரங்களும். அங்குசம் பாசம்
கரும்புவில் மலர்கள் ஐந்தும்,
கனிவாயில் மூரலும் கருணைபொழி விழிகளும்,
கனகமணி ஒளிரு முடியும்,
ஈர்க்கும் சுடர்முகமும், இருவிழி களிப்பயாம்
எங்கெங்கும் காண அருள்வாய்!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

4

சீரார் பெருந்துறையில் சிவயோக நாயகி;
சிவகாமி தில்லைமன்றில்;
தென்குமரி பகவதி; திருவானைக் காவினில்
திகழும்அகி லாண்டேச்வரி;
காரார் மதிற்கச்சி காமாட்சி; அங்கயற்
கண்ணிசெந் தமிழ்மது ரையில்;
கங்கைவள நாடுடைய நங்கை விசாலாட்சி;
காளிவங் காள மண்ணில்;
தாரார் சிவன்தோளும் தமிழும் விழைபவள்
சமயபுரம் அதனில் மாரி;
தட்டாமல் கடவூரில் பட்டருக் கருள்செய்த
தையல்அபி ராம வல்லி;
ஏரார் மழைக்கண்ணி எண்ணரிய நின்கோலம்
யாவும்எமை ஆள வலவோ?
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

5

பனிதங்கு நிலவுபோல் பால்போல் பளிங்குபோல்
பட்டொளி நிறைந்த வடிவும்,
படிகமணி மாலையும் ஏடும் தரித்துயாழ்
பயின்றருளும் நான்கு கரமும்,
புனிதங்கள் யாவும பொருந்தவெண் டாமரைப்
பூமேல் விளங்கு பதமும்,
பொழுதெலாம் எண்ணும்என் பழுதெலாம் போக்கிநற்
புலமைதர வேண்டும் அம்மா!
கனிதந்து மலர்தந்து கவிதந்து தொழுவோர்க்குக்
கண்தந்து காக்கும் அரசே!
கலைஞான மகளென்ற நிலையான புகழ்கொண்ட
கருணைமய மான பொருளே!
இனிதங்கு தடையின்றி யான்பாட நீகேட்க
இதயம் கனிந்தரு ளுவாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

6

மாதவன், சீதரன், மதுசூத னன்,துளசி
மாலைமார் பன்,கேச வன்;
வைகுந்தன், அச்சுதன், மலைமேலும் அலைமேலும்
வாழ்கின்ற மறைநா யகன்;
தாதவிழ் மலர்க்கூந்தல் சனகிமண வாளன்,
சனார்த்தனன் தேவ தேவன்;
சாரங்கன், நாரணன், தாமோ தரன்,கோதை
தலைவன், ஆழ்வார்கள் நேசன்;
மேதினி அளந்ததிரி விக்(கி)ரமன், திருமகள்
விழைகின்ற பதும நாபன்;
வேறுவே றானபெயர் நூறுநூ றாய்விரியும்
மேகவண் ணன்தங் கையே!
ஈதென வரைந்துயாம் ஓதுதற் கரியநின்
இசைபாட மொழியே துகாண்!
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

7

வானமும் பூமியும் மாறினும் மாருத
 வாய்மைவடி வான தேவி
வழிபாடு செய்பவர் குறைபாடு தீர்த்தின்ப
 வாழ்வுதரும் ஆதி தேவி
தேனுமாய் அமுதமாய்ச் சித்தத்தி லேநின்று
 தித்தித் தினிக்கும் தேவி
சேராரின் மார்பைஇரு கூருக வேசெய்யும்
 திரிசூலம் ஏந்து(ம்) தேவி
கானமும் சிற்பமும் கலைமலர் பலப்பலவும்
 காணிக்கை கொள்ளும் தேவி
கற்பனையும் ஒப்பனையுங் காலம்ஒரு மூன்றும்
 கடந்தஎம் தேவ தேவி
ஈனமொன் றண்டாத ஞானமா தேவி, உனை
 என்சொல்லி வாழ்த்து வோம்யாம்!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
 இமயமலை வாழும் உமையே!

8

வரம்பற்ற ஆற்றல் வரப்பெற்ற பண்டனை,
மற்றும்அவன் பெற்ற மகனை,
மாறுகொள் விடங்கனை, மடம்படு விசுக்(கி)ரனை,
மதுகைட பன்,மயி டனை,
உரம்பெற்ற சும்பனை, நிசும்பனை, நரகனை,
உதிரபீ சன்மரபினை,
ஒழிவிலாச் சண்டனை, முண்டனை, இரணியனை,
உணர்வற்ற தக்கன் தனை,
சிரம்பத்து பெற்றவனைத் தேரேறி மாவேறிச்
செற்றஎம் வெற்றி மயிலே!
சேவிக்கும் அடியரை வாழ்விக்கும் ஆசையால்
செங்கோல் பிடித்த அழகே!
இரும்புவி புரந்தருள் பெரும்பெயர் மடந்தைஉனை
என்சொல்லிப் போற்று வோம்யாம்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

9

பிறையார் சடைப்பித்தன், பிஞ்ஞகன், சங்கரன்,
 பிறவாத யாக்கை உடையோன்;
பேரா யிரங்கொண்ட பெருநாவ லன்,சிவன்,
 பிரமன் அறி யாத மறையோன்;
கறையார் கழுத்தினன், கண்ணுதல், கயற்கண்ணி
 காதலன், கங்கை நாடன;
காளத்தி நாதன், கபாலி,கங் காதரன்,
 கயிலேயோன், மங்கை பாகன்;
சிறையார் புனற்றில்லைச் சிற்றம் பலத்தினன்,
 த்ரியம்பகன், தியாக ராசன்;
திரிபுரம் எரித்தவன், குருபரன், ஈசன்,எனச்
 செப்பும்எம் அப்ப னுனை
இறையோனும் நீயும்எம் இல்லங்கள் தோறும்
 எழுந்தருள வேண்டும் அம்மா!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
 இமயமலை வாழும் உமையே!

10

மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் மேலான
முதல்வி,முக் கண்ணி போற்றி!
முறையாகத் தொழுவோர்க்குத் துணையாகி வழிகாட்டும்
முத்தமிழ்ச் செல்வி போற்றி!
நாவுக்கும் நெஞ்சுக்கும் நலம்தந்(து) இனிக்கின்ற
நாதாந்த சக்தி போற்றி!
நான்என்றும் எனதென்றும் நலியாத நிலைசேர்க்கும்
ஞானப்பூங் கோதை போற்றி!
பாவுக்கும் பூவுக்கும் பாதம் பெயர்த்தருளும்
பாண்டிமா தேவி போற்றி!
பணிவார்தம் துயரோடு பிணியாவும் பொடியாக்கும்
பரமகல் யாணி போற்றி!
ஏவல்கொண் டுலகுபல காவல்செய் அன்னை நின்
இணையடிகள் போற்றி! போற்றி!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

11

மாலினி கபாலினி மனோன்மணி நந்தினி
வன்னிமன் டலவாசினி
மானவதி யோகினி மனுதீத நாயகி
வாகினி மனமோகினி
சூலினி சுவாசினி சுமங்கலி சுதந்தரி
துணைவிதிரி புரசுந்தரி
சோதிச் சொருபிணி சுதாமினி அம்சினி
சும்பாதி சுரமர்த்தனி
சாலினி சனுதனி தருணிகல் யாணிசிவ
சங்கரி சாரு கேசி
சாம்பவி கலாவதி தருமவர்த் தனிஜனனி
சாமுண்டி தேவ தேவி
ஏலவார் குழலினன எண்ணரிய பெயர்பூணும்
ஈச்வரி போற்றி! போற்றி!
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

12

மாசக்தி கௌமாரி மாதங்கி கங்காளி
மனோன்மணி புவனேச் வரி
வராகி இந்த் ராணிவயி ரவிஜயை வைணவி
மகேச்வரி காத்யா யனி
பேசரிய அபிராமி பிரமாணி காயத்ரி
பிறைசூடி முத்து மாரி
பெரியநா யகிகுமரி அரியநா ரணிகௌரி
பெற்றிமிகு கொற்றி நீலி
தேசுமிகு சுந்தரி பவானிகார்த் திகைவாணி
த்ரியம்பகி சிவசங் கரி
திரிசூலி காமாட்சி சிம்மவா கனிமயிடன்
சிரமேறும் சண்டி காளி
ஈசன்மனை யாட்டிஎம் பெருமாட்டி மீனாட்சி
இணையடிகள் பொற்றி! போற்றி!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

13

பொன்னும்நீ நான்தேடும் பொருளும்நீ புகழும்நீ
போகங்கள் யாவும் நீயே!
புறமும்நீ அகமும்நீ புவியெங்கும் நான்காணும்
பொலிவுநீ போதம் நீயே!
முன்னும்நீ நடுவும்நீ முடிவும்நீ முடிவிலா
முழுமைநீ ஞானம் நீயே!
முதுமைநீ இளமைநீ மோகம்நீ தாகம்நீ
மோனம்நீ கானம் நீயே!
மன்னும்நீ தான்எனது வாழ்வென்று வளம்என்று
மனமுருகி நின்ற தெல்லாம்
வஞ்சமோ? எனதுதுயர் கொஞ்சமோ? இவ்வாறு
மறப்பதும் ஒருநெஞ் சமோ?
இன்னும்நீ சற்றும் இரங்கா திருந்திடில்
என்னுயிர் இனிமிஞ் சுமோ?
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

14

ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலரிலே
அழகாக வீற்றி ருப்பாய்!
அங்குசம் பாசம் கரும்புவில் ஐங்கணை
அங்கையில் ஏற்றி ருப்பாய்!
வேயின் குழல்முழவு வீணைநா தச்வரம்
மேவுமிசை கேட்டி ருப்பாய்!
விறலியர் நடம்புரிய வேறுவே றனகலை
விந்தைகள் நயந்தி ருப்பாய்!
ஞாயிறு முதற்பிரமன் நாரணன் துதித்திடவும்
ஞாலமுழு தாண்டி ருப்பாய்!
நாடிவரும் அன்பர்க்குக் கோடிநலம் தந்துலகில்
நலிவின்றிக் காத்தி ருப்பாய்!
ஈயென இரந்துன்னை வேண்டவும் வேண்டுமோ
எனையும்நீ ஆத ரிப்பாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

15

கொடியேறு தேர்களிடைக் கொய்யுளை வெண்புரவி
குஞ்சரம் உலவு வாசல்.
குமுதவாய் மாதரும் அமுதவாய்ப் பாணரும்
கூடிவரும் அழகு வாசல்.
கடியேறு மஞ்சளொடு குங்குமம் சந்தனம்
கவிமணம் நிறைந்த வாசல்.
கள்ளமொன் றில்லாத உள்ளமுடை யார்க்கெலாம்
கதவுகள் திறந்த வாசல்.
வடிவேறு திருமகள் மணாளனொடு வானவர்
மணிகொண்ட முடிகள் படிய
மங்காத நவமணிகள் எங்கெங்கும் சிதற ஒளி
மயமாய் விளங்கும் வாசல்.
இடியேறு முரசொலி எழும்வாசல் அன்னைநீ
எழுந்தருளும் கோயில் வாசல்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

16

எனையாளும் அன்னைநின் இருபாத கமலங்கள்
இரவிபோல் ஒளிவீசுமாம்!
எதிரான தக்கனை இரணியன் எச்சனை
எரியேற்றி முறைகாக்குமாம்!
தனைநாளும் மறவாமல் நினைவார்தம் குரல்கேட்டுத்
தாழா(து) எழுந்தோடுமாம்!
தலைமாலை சூடிஒரு கொலைவாளும் ஏந்தியே
சங்கார நடமாடுமாம்!
வினையோடு பகைபிணிகள் வேதனை தவிர்க்கின்ற
மெய்யான துணையாகுமாம்!
மேலுக்கும் மேலான வெற்றிப் பதங்கட்கு
வேறேது நிகராகுமாம்?
இனையஎன எழுதரிய புகழுடைய நினதடிகள்
ஏழையேற் கருள்செய் கண்டாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

17

'நாள்என்றும் கோள்என்றும் நாங்கள் அஞ் சோம்;அந்த
நமனையும் ஏவல் கொள்வோம்!
நாடாளும் அரசர்க்கும் ஈடாக மேலாக
ஞாலமுழு தாள வல்லோம்!
வாள்ஒன்று கண்ணுடைய மங்கைநல் லாட்கன்றி
மற்றையார்க்(கு) அடிமை செய்யோம்!
வறுமையும் கொடுமையும் மடமையும் அகலவே
மாசக்தி பேர்சொல் லுவோம்!
தாள்ஒன்று தொண்டரைத் தாங்கும் பராசக்தி
தன்மக்கள் நாங்கள்'—எனவே
தறுகண்மை குன்றாத பெருமக்கள் கூட்டத்தில்
சாரும்நாள் எந்த நாளோ?
யாளியும் விடையுமே ஊர்தியா அண்டங்கள்
யாவும் புரந்த ருளுவாய்!
இறைவிளை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

18

கற்பூர சோதியில், கமலால யத்தினில்,
கயிலாய மலைமீதினில்,
கந்தருவர் கின்னரர் கணநாதர் சித்தர்கள்
கண்டுதொழ நின்ற பொருளே!
வெற்பூறு கங்கையை வில்வமுடன் ஆத்தியை
வெள்ளெருக் கைத்தும் பையை
மிடைகொன்றை பாம்பினொடு பிறைசூடு வான்பங்கில்
மேவித் தழைத்த எழிலே!
மற்போர் துணிந்தமா மயிடன் தலைமீது
மறைபோற்ற ஏறு திறலே!
மாறுபடு சூரர்குலம் நீறுபட வேல்தந்து
வாகைமலர் சூடும் அருளே!
எற்பொருது மேலெழும் இளஞாயி றே! எங்கள்
ஏழமை தவிர்த்த அரசே!
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

19

'சரவண, சண்முகா, சத்திவடி வேலா,
சடானன, மயில்வாகன!
தணிகாசலா, அருணகிரிகாதலா, செந்
தமிழ்ச்சுவை பழுத்த அழகா!
குருபரா, கந்தா, குகா, கார்த்தி கேயா,
குறத்திமண வாள முருகா!
கும்பிடும் அடியவர் வெந்துயர் களைகின்ற
கொற்றவை பெற்ற குமரா!
கருதிவரும் யாவினையுட் உறுதிபெற வேநல்கும்
கருணைமய மான தலைவா!
களங்கண்ட வீரா, நலந்தந்து கா, வெண்
கடம்பமலர் மார்பா!'– என
இருபோதும் தொழுவோர்க்கு இனிபோதும் போதும்என.
ஈவோனுக் கு) அன்னை நீ காண்!
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

20

அடியார் மனப்பொழிலில் விளையாடும் அன்னமே!
ஆதிசிவன் மலைமார்பிலே
அசையும் பசுங்கொடியே! ஆகம புராணங்கள்
அடைவரிய தொடுவானமே!
கொடியோர் உயிர்பருகும் குலிசமே! அவுணர்தம்
கோட்டையில் விழுந்த கனலே!
குலமாதர் மஞ்சளொடு குங்குமம் காக்கின்ற
கோமளத் தெய்வ மலரே!
கடவா பவக்கடல் கடக்கவரு தோணியே!
காமம் கடுஞ்சி னத்தைக
காய்கின்ற பருதியே! நோய்சாவு கவலைகள்
களைகின்ற அரும ருந்தே!
இடையீ டிலாதுதரும் மழைமேக மே! எம்
இலக்காவ(து) உன்பாதமே!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

21

தமிழெனும் அளப்பரும் தண்கடல் சூழ்மதுரைத்
தலைவிநீ! அமுத வாக்கால்
சங்கரன் வணங்கிய சிவானந்த சௌந்தர்ய
தத்துவச் செல்வி யும்நீ!
சிமையவரை மேருவில் குமரிமுனை அலைகளில்
சீர்பூத்த பைங்கொ டியும்நீ!
செருவென்று புகழ்கொண்ட முகவை **சிவ கங்கை** முதல்
தேசங்கள் ஆள்பவள்நீ!
சமயங்கள் யாவிலும் அமைகின்ற உண்மைநீ!
சன்மார்க்க வள்ளல் தாய்நீ!
சபரிமலை காச்மீரம் ஸ்ரீ சைலம் காசிஎனும்
தலம்தோறும் வாழ்ப வள்நீ!
இமையோரும் முனிவரும் இலக்கியப் புலவோரும்
ஏத்துமல ரடிகள் வாழி!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

22

''மறைநூல் படைத்தவள் 1 மலைதூ எடுத்தவள்; 2
　　மகமேரு வில்லாய் வளைத்தவள்; 3
மணியாழி வழிதரக் கணைதான் விடுத்தவள்; 4
　　வலங் கொண்ட குலிசம் தரித்தவள்; 5
பிறைபோல் எயிற்றினால் புவிகாத் தளித்தவள்; 6
　　பெருகும் கபாலக் கரத்தினள்'' 7
பேசும்இவர் எழுவரும் * ஆணைவழி மேவநீ
　　பேரர சியற்றும் திறத்தினள்!
துறைசேர் தமிழ்க்கலை வடநூல் மறைத்தொகை
　　துதிசொல்ல ஞாலம் புரப்பவள்!
துணைநீ எனச்சரண் புகுவோர் துயர்மலை
　　தூள்செய்ய நெடுவேல் தொடுப்பவள்!
இறையோனும் தானுமாய் முறைகாக்கும் அன்னைநீ
　　ஏகம்பன் கச்சித் தலத்தினள்!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
　　இமயமலை வாழும் உமையே!

---

* 1 அபிராமி 2 கௌமாரி 3 மகேச்வரி 4 நாராயணி 5 இந்திராணி 6 வராகி 7 காளி என்னும் சப்தமாதர் பெருமை பேசப்படுகிறது.

23

மனக்கவலை தீர்க்கும் மருந்தென்று சொல்லுவேன்;
வயிறார உண்ணு தற்கு
வட்டித்த சோறென்பேன்; மற்றும்நான் பருகவே
வாய்த்ததேன் வாரி என்பேன்;
சினக்களி(று) எனத்திரி புலன்களை அடக்கியே
தெருட்டும்அங் குசம்நீ என்பேன்;
செறியும் வினைக்காட்டில் தீஎன்பேன்; சிந்தையாம்
தேர்கொண்ட ஆணி என்பேன்;
தனக்குவமை இல்லாத தலைவிஉனை யேஎன்றும்
தஞ்சம்என் பேன்; கருணையால்
தாரணி வகுத்தபரி பூரணி உனக்கெனது
தமிழ்தந்து வாழ்த்தி நிற்பேன்;
எனக்கினியும் சோதனைகள் ஏன்? உலகில் உனையன்றி
எவரென்னைக் காக்க வல்லார்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

24

நினையாத நெஞ்சும், நினைந்துநின் நாமம்
நிகழ்த்திஅறி யாத நாவும்,
நேர்வந்து காணாத கண்ணும், நின் சீர்களை
நேயஞ்செய் யாத செவியும்,
மனைவாழ்வு செல்வம் வழங்கும்உனை நாளும்
வணங்கித் தொழாத கையும்,
மானுடரும் வானவரும் சூழவரும் நின்கோயில்
வலம்செய்கி லாத காலும்,
தினையான பொழுதும் உனைச் சித்தமிசை வைத்திலாச்
சிறுவாழ்வும், பெருந்து யரமும்,
தேர்ந்தெனக் கேபிரமன் ஈந்தனன் நானும் உன்
சேவகம் புரிவ தெந்நாள்?
எனையாளும் அன்னையே! உனையன்றி இவ்வுலகில்
எவரென்னை அறிய வல்லார்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

25

அடையா நெடுங்கதவும் அஞ்சேல் எனும்சொல்லும்
அமைகின்ற சந்நி தானம்!
அடியாரும் வானவர் அரம்பையர் முனிவரும்
அணைகின்ற சந்நி தானம்!
பொடியேறு திருமேனிப் புனிதரும் நீயுமாய்ப்
பொலிகின்ற சந்நி தானம்!
போயெவர் கடைத்தலையும் ஈயென்று நில்லாத
புகழ்நல்கும் சந்நி தானம்!
முடவர்க்குக் கால்தந்து, குருடர்க்குக் கண்தந்து,
மூங்கைக்கும் மொழிகள் தந்து,
மும்மைமலம் அறுவித்துச் செம்மைநலம் உணர்வித்து
முத்திதரும் சந்நி தானம்!
இடர்யாவும் போக்கும் எழிற்சந்நி தானம், நின்
இசைகொண்ட சந்நி தானம்!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

26

கனலின் பிழம்பாகக் கதிரவன் ஒளியாகக்
        கார்மேக வான வில்லாய்
கறையேதும் இல்லாத நிறைவான திங்களாய்க்
        காட்சிதரும் ஆதி சக்தீ,
நினையவும் அரிதான அனுபவப் பொருளாக
        நிலையங்கள் ஆறும் ஏறி
நீங்காத பேரின்ப மாம்கோலம் பலகொள்ளும்
        நிகரற்ற மூல சக்தி,
அனலாய்த் துயின்றுபின் அறிவுற்று மேலெழுந் (து)
        ஆனந்த முகடு மேவி
அழியாமை தரும்அமுத மழையாய்ச் சுவைத்தருளும்
        அரவான யோக சக்தீ,
இனிதுபுவி இனிதுவான் இனியதே மனிதவாழ்(வு)
        இனியநின் துணைவாய்க் குமேல்
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
        இமயமலை வாழும் உமையே!

27

அன்னைநின் அருளினல் அல்லாமல் ஐயனும்
அகஒளி பெறல் அரிதுகாண்!
அரியதொழில் மறையவன் பிரமனையும் வாழ்விக்கும்
ஆதார சுருதி நீகாண்!
மன்னுபுகழ் அவதாரம் ஒன்பதோ டொன்றினையும்
மாயோன் தனக்களித்து
வருத்துபகை அவுணரை அழித்தருளும் நினதுகை
வண்ணம் வழுத்தரிதுகாண்!
பென்னிலகு திருவதனம் பொழிகருணை வெள்ளத்தில்
பொருகயல் இரண்டினேடும்
புரைதீர்ந்த செப்பவழம் நிரைசேர்ந்த வெண்முத்தம்
பூங்கமல மலரு மாக
என்இதய பீடத்தும் ஏறஇசை வாய்என்னில்
என்றும்அடி யார்க்கெளியைகாண்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

28

மாரியாய், மேரியாய், மகமது நபிக்கருள
வந்தஒரு மாசக்தியாய்,
மனவாக் கிறந்ததிரு வருளாய் மதங்கள்தொறும்
வாழ்கின்ற தெய்வம் நீயே!
ஓரிடம் ஒருகுணம் ஒருநிலை ஒருருவம்
ஒருபெயர் ஒருவி கற்பம்
ஒன்றுமில் லாதபடி ஒவ்வொன்றும் தானுகி
உணர்வரிய பிரமம் நீயே!
ஆரியம் திரவிடம் ஆங்கிலம் சீனமென
அமைகின்ற மொழிகள் நீயே!
ஆமென்றும் இல்லையென அறுதியுடன் வாதித்தும்
அடைவரிய எல்லை நீயே!
யாரென்ன சொன்னலும் யான்உன்னை ஒருநாளும்
ஐயுற்ற தில்லை தாயே!
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

29

துயிலெழும் வேளையில், சுவைநீர் அருந்துகையில்,
துறைநீர் படிந்தெ ழுகையில்,
தொழுகையில், பலபணியும் புரிகையில், இன்பமொடு
துன்பங்கள் எதிர்வ ருகையில்,
வயிறார உண்ணுகையில், மாதரார் தோட்புறம்
மனமுருகி உயிர்தோய் கையில்,
மக்கள்மெய் தீண்டுகையில், மாறாத காதலொடு
வண்டமிழ்ச் சுவைஆய் கையில்–
அயலெவரும் அறியாமல் அன்னையுனை வழிபடும்
ஆசைமகன் நானில் லையா?
ஆசைமகன் தருகின்ற வாசமலர் மாலைகள்
அத்தனையும் தேனில் லையா?
இயலும்வரை பாடியும் எடுத்தளிக் காமல்நீ
இருப்பதொரு பழியில் லையா?
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

30

கொற்றத் தமிழ்க்கம்பன் குற்றம் மறைக்க நீ
கொட்டிக் கிழங்கு விற்றாய்!
கூறுதமிழ் ஏட்டினை நீரிலும் நெருப்பிலும்
குலையாமல் காத்து நின்றாய்!
வெற்றித் தமிழ்க்காள மேகமென வீணையும்
மேதையாய் நீஆக் கினாய்!
மெய்ஞ்ஞானி சொற்றமிழை மெய்ப்பிக்க வானத்தில்
வெண்ணிலவு தோற்று வித்தாய்!
ஒற்றித் தலம்விட்டு வள்ளலார் பசிதீர
ஓடோடிச் சோறு தந்தாய்!
உத்தமக் கவியரசன் குருபரன் முன்பு நீ
ஒளிசிந்த நடைப யின்றாய்!
இற்றைக்கென் தமிழோடும் சற்றுவிளை யாடிநீ
இன்னருள் புரிய வருவாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

31

என்னென்ன கனவுகள், என்னென்ன காதல்கள்.
எத்தனை இசைப்பா டல்கள்!
இரவுபகல் பாராமல் இமைசிறிதும் மூடாமல்
எழுப்பிய மனக்கோட் டைகள்!
அன்னையோடு தந்தையென அன்புமனை மக்களென
ஆதரவு தரும் சுற் றங்கள்!
ஆயிரம் நேயங்கள், அடைவரிய செல்வங்கள்!
ஆயபிற வாழ்வு நிலைகள்—
பொன்னிநதி ஓட்டத்தில் பொங்கிஎழும் குமிழிகள்!
புரளும்அலை நாட கங்கள்!
பொய்ம்மைகள்! நில்லாமல் போயொழியும் மாயங்கள்!
பொருளற்ற கூக்கு ரல்கள்!
இன்னவகை எண்ணாமல் பின்னலிடும் ஆசையால்
என்னென்ன மனவீக் கங்கள்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

32

காற்றைப் படைத்தவள் நீயென்ற போதிலும்
கவரிகள் வீசு கின்றோம்!
கனலும் உன் வடிவெனிலும் கற்பூர தீபங்கள்
கமழ்தூபம் காட்டு கின்றோம்!
ஆற்றையும் கடலையும் அருளியநின் மேனிக்கும்
அபிடேக நீர்சு மந்தோம்!
அங்கிங் கெனாதுவெளி எங்குமுள நீஉறைய
ஆங்காங்கு கோயில் செய்தோம்!
போற்றரிய நின்வடிவைப் பொன்னிலும் கல்லிலும்
பூசித்து வாழ்த்து கின்றோம்!
புவிமீது நீதந்த பொருளன்றி வேறொன்றைப்
போய்த்தேடி எங்கு பெறுவோம்?
ஏற்றருள வேண்டும்என இதயத்தை எம்அன்பை
இணைமலர்த் தாளில் வைத்தோம்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

33

அன்பான நெஞ்சங்கள் அல்லலால் அழிவதும்
அன்னைநீ அறியாததோ?
அசடரும் கசடரும் அசத்தியப் பேயரும்
ஆட்சிபெற் றேவாழ்வதோ?
பொன்னுன உலகத்தைப் போர்வெறி புலன்வெறி
புசித்திடவும் நீபார்ப்பதோ?
போகாத வழிபோய்ப் புலம்பிஅழும் மனிதகுலம்
பொலிவுபெற வழிஇல்லையோ?
தன்னலமும் வஞ்சமும் தரணிமகள் உயிர்நிலை
தகர்த்தல்நீ சம்மதித்தோ?
சங்கார நடமாடி வெங்கொடுமை சாய்க்கஇது
சரியான பொழுதில்லையோ?
என்னவரும் ஆனுலும் உன்மவுனம் கலையா(து)
இருப்பதன் பொருள்என் னவோ?
இறைவிளை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

34

சூலமும் வாளும் சுழற்றிவரும் வேளையில்
துர்க்கையாய் மாறு வாய்நீ!
துப்பாக்கி பீரங்கி தோட்டாக்கள் ஆகியும்
சூறைபோல் மேவு வாய்நீ!
சீலமும் ஞானமும் தேசமும் வாழ்வுறச்
செருமுனையில் ஏறு வாய்நீ!
திருவடி இரண்டிலும் பகைவர்செங் குருதியால்
செம்பஞ்சு பூசு வாய்நீ!
காலமும் விதிகளும் கட்டுவிடும் நேரம்
கறங்காக ஆடு வாய்நீ!
காணாத நோயாகிப் போராகி மரணமாய்க்
கயமையைச் சாடு வாய்நீ!
ஏலவார் குழலிலே வாகைமலர் சூடியே
எதிரின்றி ஆளு வாய்நீ!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

35

மேனியும் ஆடையும் விழிகளும் சிவந்தபடி
வீரமா காளி யே வா!
மேவுபகை யாவினையும் சாவுமகள் நாவில்
விருந்தாக்கும் சூலி யே வா!
தானென நினைந்துவரும் ஆணவம் தனையுண்டு
சதிராடும் மாரி யே வா!
தருமநெறி தவறாத பரதநிலம் காவலுற
சங்கார தேவி யே வா!
ஆனதினி ஆகட்டும் அறம்மட்டும் வாழட்டும்
ஆங்கார நீலி யே வா!
அமைதிவழி மூடுமெனில் அழிவுவழி திறந்துநீ
ஆதிமக மாயி யே வா!
ஈனமினி வெல்லா தெனப்புவி உணர்ந்திட
எழுந்துவா! விரைந்து வா! வா!
இறைவீஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

36

அல்லாத செயல்புரியும் பொல்லாத மனிதர்கள்
அழியும் ஒரு காலம்வரும்!
அரக்கமனம் உடையவரின் ஆதிக்க வெறியாட்டம்
அடங்கஒரு நேரம்வரும்!
சொல்லாலும் நினைவாலும் துயர்செய்து திரிபவர்
துடித்துயிர் இழக்க நேரும்!
துறைதோறும் துறைதோறும் முறைநீங்கும் கயவர்க்குத்
தூக்குமரம் ஒன்று தோன்றும்!
வெல்லாத சான்றோரின் வேதனைகள் தீரும்ஒரு
வெற்றிநாள் விரைவில்வரும்!
மேலோரும் நூலோரும் வீறோங்கி நமையாளும்
மெய்ஞ்ஞான உலகு தோன்றும்!
எல்லாரும் வாழ்வுபெறும் அந்நாள்என் தவமெலாம்
ஈடேறும் இனிய நாளாம்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

37

என்னகவி பாடினுல் உன்மனது மாறுமோ,
        என்மீதும் கருணை வருமோ!
எவர்மூலம் அணுகினுல் யான்செய்யும் விண்ணப்பம்
        எளிதாக நிறைவே றுமோ!
சொன்னபடி கேளாமல் துயர் செய்யும் என்மனம்
        தூய்மைபெற வழியு முண்டோ?
சோதித்து வாட்டுவது போதுமென உன்னிடம்
        சொல்லுபவர் யாரு மிலையோ?
சின்னமலர் என்ருலும் தேன்துளி சுமந்துதவம்
        செய்துவரும் மலரல் லவோ?
செப்புவது பிழைபடினும் செவியின்பம் தரவல்ல
        செய்மழலை மொழியல் லவோ?
இன்னபடி தான்பெற்ற பிள்ளைதுயர் எய்துகையில்
        இளகாத தாயு முண்டோ?
இறைவிளை ஆண்டருளும் இராசரா சேச்வரி
        இமயமலை வாழும் உமையே!

38

ஆராய்ந்து சொல்தேடி ஆன்மாவின் தாபத்தை
அறிவிக்க முயலு கின்றேன்!
ஆனாலும் முழுமையும் அறிவிக்கும் திறனின்றி
அபலையாய்க் கதறு கின்றேன்!
சீர்தோறும் அடிதோறும் தேவிநின் திருவடிச்
சிலம்பொலி விரும்பு கின்றேன்!
தெய்வமே உன்காலும் சேரும் எனும் ஆசையால்
செந்தமிழ் முழங்கு கின்றேன்!
வாராத துன்பங்கள் வந்தாலும் உனையன்றி
வைப்புநிதி வேறு காணேன்!
வாய்முத்தம் ஒன்றேனும் தாய் நீ வழங்காமல்
வருத்துதல் பொறுக்க மாட்டேன்!
யாரான போதும்அவர் இன்னலுற ஒப்பாத
எனை நீ மறுத்தல் தகுமா?
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

39

உயிரென்ற யாழிலே உந்தியும் ஊன்றியும்
உன்புகழ் மீட்டு கின்றேன்!
உள்ளமெனும் திரையிலே உணர்வென்னும் கோலினல்
உன்வடிவு தீட்டு கின்றேன்!
செயலற்ற ஊமையாய்ச் சிந்தையெனும் மேடையில்
சிறப்புரை நிகழ்த்துகின்றேன்!
சிதைவுற்ற பார்வையுடன் செந்தமிழ் இலக்கியம்
செய்துனே வணங்கு கின்றேன்!
குயிலாக மாறிநான் கோயில்கள் தோறும் உனைக்
கூவிவர அருளுவாயா?
குளிர்தென்றலாகிநின் புகழ்பாடி உலகெங்கும்
கூத்தாட உதவு வாயா?
எயிலார் பெருந்துறைச் சிவயோக வல்லியே!
ஈசனர் மகிழும் மலரே!
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

40

தாய்கை பிடித்தபடி தளர்நடை பயின்றுனது
　　சபையேறி வரவில்லையா?
தந்தையார் உபதேச மந்திரம் மொழிந்தபடி
　　சந்நிதியில் தொழவில்லையா?
வாய்திறந் தால்அங்கு வருவதுன் நாமம் என
　　வாழ்கின்ற மகனில்லையா?
மாதரார் போகத்தில் மயங்கிடும் காலத்தும்
　　மறவாத மனமில்லையா?
ஓய்வின்றி நான்பாட உவப்போடு நீ கேட்க
　　ஒப்பியதும் நினைவில்லையா?
ஓடோடி வந்தெனது தீராத துயர்தீர்க்க
　　உன்நெஞ்சில் கனிவில்லையா?
ஈகின்ற என்தலைவி நீஇல்லை யா? உன்றன்
　　இசைவாணன் நானில்லையா?
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
　　இமயமலை வாழும் உமையே!

41

உயிரினுக் குயிரான உனையன்றி வேறெவர்
　　உறவைநான் தேட முடியும்?
ஊனுருக உயிருருக உனையன்றி யார்புகழை
　　உணர்வோடு பாட முடியும்?
மயிலாக நீயாடும் மனமேடை யதனில்நான்
　　மற்றெவரை ஏற்ற முடியும்?
வஞ்சமோ பகைமையோ வருத்திஎவ் வாறுநின்
　　மைந்தனை வீழ்த்த முடியும்?
இயலாகி இசையாகி எனையாளும் உனைநீங்கி
　　எவர்நிழலில் வாழ முடியும்?
என்றும்நின் திருவடியில் ஒன்றும்ஒரு மலராக
　　என்னைநீ சூட முடியும்!
எயிலாழி சூழ்குமரி அலைவாயில் உனைநாட
　　இன்னல்கள் யாவும் முடியும்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
　　இமயமலை வாழும் உமையே!

42

நெற்றியில் நீதந்த குங்குமம் இருக்கையில்
நெஞ்சினில் மயக்க மில்லை
நேரான சிந்தையொடு போராட வந்தபின்
நினைவினில் குழப்ப மில்லை
முற்றுமுனை நம்பியே முறையோடு மேற்கொளும்
முயற்சியில் தயக்க மில்லை
மோகவய மாகி உனைத் தாகமுடன் பாடிவரும்
முத்தமிழ் சலிப்ப தில்லை
உற்றபகை யாரெனிலும் உன்துணை கிடைத்தபின்
ஒய்வுற நினைப்ப தில்லை
உலகமோ ரேழுமே எதிராக நின்றாலும்
உண்மையை மறப்ப தில்லை
இற்றதினி அச்சம் இடர்கவலை நோய்பகைகள்
இன்னல்கள் இல்லை இல்லை
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

43

ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவுபவள்;
        ஓங்கார நிலை ஆனவள்;
ஒன்ருய் அரும்பியவள்; பலவாய் விரிந்தவள்;
        உணர்வினுக்(கு) அமுதானவள்;
அளிநின்ற சிந்தையில் அருவியாய்ச் சொரிபவள்;
        அழலின் பிழம்பணிபவள்;
அண்டபகிரண்டம் அனைத்தையும் செண்டாய்
        அடித்துவிளை யாடவல்லள்;
புளிநின்ற செம்பிலும் உளிநின்ற கல்லிலும்
        பொருந்தியதும் என்ன விந்தை?
புயலாய்க் கிளர்ந்தெழு புரட்சிமகள் அமைதிஎழில்
        போர்த்துற்ற தென்ன செய்கை?
எளிவந்து புதுகைநகர் குடிகொண்ட இளவஞ்சி,
        எமையாளும் புவனேச்வரி!
இறைவிளை ஆண்டருளும் இராசரா சேச்வரி
        இமயமலை வாழும் உமையே!

44

ஓமெனும் மந்திரத் துட்பொருள் ஆகின்ற
ஸ்ரீராச ராசேச்வரி
ஊழிதொறும் ஊழிதொறும் உயர்அறம் காக்கின்ற
ஸ்ரீராச ராசேச்வரி
நாமமும் உருவமும் பலவாகி உலகாளும்
ஸ்ரீராச ராசேச்வரி
ஞானமும் இச்சையும் கிரியையும் தானான
ஸ்ரீராச ராசேச்வரி
சேமமும் இன்பமும் சித்தியும் உதவிடும்
ஸ்ரீராச ராசேச்வரி
ஸ்ரீசக்ர நிலயத்தில் சிவசக்தி வடிவான
ஸ்ரீராச ராசேச்வரி
யாமும்எம் கல்வியும் யாவும்உன் அடைக்கலம்
ஸ்ரீராச ராசேச்வரி
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

45

மண்ணவரும் விண்ணவரும் மற்றெவரும் சொல்லரிய
மரகதத் தாள்கள் வாழ்க!
மனத்துயர் அகற்றியாம் நினைத்தது நினைத்தபடி
வழங்கிடும் கைகள் வாழ்க!
தண்ணளி சுரந்தொளிரும் தாமரைக் கண்களொடு
தமிழ்தேறும் செவிகள் வாழ்க!
சமர்வேட்ட அவுணரின் மறம்வாட்டி வீழ்த்திய
தடம்பணைத் தோள்கள் வாழ்க!
பண்ணிலகு தீஞ்சொல் பசுந்தமிழ் நுகர்ந்தருளும்
பரிவுமிகு சிந்தை வாழ்க!
பாரகம் அடங்கலும் பாலிக்கும் செங்கோலும்
படை முரசு குடையும் வாழ்க!
எண்ணரிய புகழ்கொண்ட பெண்ணரசு நின்கொற்றம்
இசைகொண்டு வாழ்க! வாழ்க!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

46

பொலிகஇவ் வையகம்! பொலிகநெடு வானகம்!
போயொழிக துயர மெல்லாம்!
புதியசொல் புதியபொருள் புதிய சுவை புதிய இசை
புலரட்டும் உலக மெல்லாம்!
மலிகவளம்! வளர்கநலம்! வாழ்கவே நல்லறம்!
மயக்கங்கள் யாவும் தீர்க!
மங்கல மடந்தையர் மனையறம் நனிதழைக!
மடமைகள் வீழ்க! வீழ்க!
கலிகெடுக! எங்கெங்கும் கருணை அர சோச்சுக!
கயமைகள் நிலம்பு தைக!
கலைமகள் விளக்கமாய்த் திருமகள் பெருக்கமாய்க்
காலங்கள் அமுதா குக!
இலம்பா (டு) ஒன் றில்லாமல் யாவர்க்கும் யாவும் இனி
எய்தநீ ஆணை தருக!
இறைவினை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

47

தேவாதி தேவியின் தெய்வமாக் கருணையால்
தீராத நோய்கள் தீரும்;
செல்வமும் செல்வாக்கும் செருமுனையில் வெற்றியும்
சீர்நிலை பேறும் சேரும்;
பூவுலகில் நிலையான புகழ்பெருகும்; அறிவில்ஒரு
புதியஒளி தான்பி றக்கும்;
பூண்ஆள் இடம்துணை புத்திரர் பசுக்கள்எனும்
பொலிவுவரும்; உயிர்த ழைக்கும்;
பாவங்கள் ஏழ்மைகள் பழவினைகள் எனும்இவைகள்
பனிபோல் அகன்று நீங்கும்;
பத்தியொடு சொல்வார்க்குச்சித்திகள் கைகூடும்;
பாரின்மிசை அமைதி ஓங்கும்;
யாவும் கடந்தபே ரின்பநிலை கிட்டும்என
இசைபாடி வாழ்த்து கின்றோம்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

முத்தமிழ் அச்சகம், சிவகங்கை-72.